# தேசிய கல்விக் கழகம், சிங்கப்பூர்
## நுழைவு நிலைத் தகுதித் தேர்வு.

தமிழ் ஆசிரியராக வர விரும்புவோர்க்கு நடத்தப்படும் தகுதி நிலைத் தேர்வு இந்த நுழைவு நிலைத் தகுதித் தேர்வு. இத்தேர்வில் தமிழ்மொழிக்கூறுகள் சோதிக்கப்படும். இத்தேர்வு இரு பிரிவுகளாக நடத்தப்படும். ஒன்று எழுத்துத் தேர்வு, மற்றொன்று வாய்மொழித் தேர்வு.

எழுத்துத் தேர்வு இரண்டு மணி நேரம் நடைபெறும் . இத்தேர்வில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

1. சொற்கோவை, இலக்கணம், மொழிப்பயன்பாடு ஆகிய கூறுகளைச் சோதிக்கும் தேர்வு.

2. கட்டுரைத் தேர்வு.

எடுத்துக்காட்டு

*அ. சொற்கோவை ( Vocabulary ).*

*கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் அடிக்கோடிடப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றுக்கும் அடியில் தரப்பட்டுள்ள நான்கு சொற்களிலிருந்து அதே பொருளுள்ள சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எதிரேயுள்ள எண்ணைக் கொடுக்கப்பட்டிருக்கும் அடைப்பினுள் எழுதுக.*

1. இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து பிழைப்புக்காகச் சிங்கப்பூர் வந்தவர்கள் மத்தியில் பரவலாக அன்று பேசப்பட்டு வந்த மொழி தமிழ்மொழி என்று சொன்னால் அது மிகையாகாது.

   1. அவ்வப்போது     3. குறைவாக
   2. மிகுதியாக     4. ஓரளவு     (   )

2. சந்தனக் கட்டையை உரசிப் பார்த்தால்தான் அதன் மணம் தெரியும். அதுபோல் சிலரை நெருங்கிப் பார்த்தால்தான் அவர்களது உயர்ந்த குணம் தெரியும்.

   1. அரைத்து     3. கரைத்து
   2. தேய்த்து     4. பொடிசெய்து     (   )

*ஆ. இலக்கணம் ( Grammar )*

*பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையின் எண்ணை எதிரேயுள்ள அடைப்பினுள் எழுதுக.*

1. சிங்கப்பூரில் --------------------------வளரப் அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பாடுபடுதல் வேண்டும்.

   1 ) தமிழ்மொழி, தமிழ் இலக்கியமும்
   2 ) தமிழ் மொழியும் தமிழ் இலக்கியம்
   3 ) தமிழ்மொழி தமிழ் இலக்கியம்
   4 ) தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும்     (   )

2. பாரதியார் ------------ பாடல்களின் மூலம் நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் மக்களிடத்தில் உருவாக்கினார்.

1 ) தன்
2 ) தம்
3 ) தனது
4 ) தங்கள் ( )

இ. கோடிட்ட இடங்களில் இருக்க வேண்டிய பொருத்தமான சொற்களை ஊகித்து எழுதவும். ஒரு கோட்டில் ஒரு சொல் மட்டுமே இடம்பெற வேண்டும்.

இலக்கியம் காலந்தோறும் வெவ்வேறு வடிவங்களை மேற்கொள்ளுகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. தமிழில் மட்டுமின்றி உலக ------------ எல்லாவற்றிலுமே இந்த நிலை ------------------ . தனிச் செய்யுட்கள் பெற்றிருந்த -------------- சிறுகதைகளும், காவியங்கள் பெற்றிருந்த ------------- நாவல்களும் தமதாக்கிக் கொண்டன. கால இயக்கத்தின் வேகத்திற்கு ஏற்ப ------------ அடையும் பரிணாம வளர்ச்சியில் ------------ இயல்பானதும் தவிர்க்க முடியாததும் ஆகும்.

## 2. கட்டுரைத் தேர்வு

*பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறக்குறைய 200 சொற்களில் ஒரு கட்டுரை வரைக.*

*1.* முதியோரைப் பராமரிப்பதன் அவசியம்

*2.* சிந்தனைத் திறனும் படைப்பாற்றலும்

# வாய்மொழித்தேர்வு

வாய்மொழித்தேர்வு இரு பிரிவுகளைக்கொண்டது.

1. ஒரு பகுதியைப் பொருள் விளங்கும்படி சரியான உச்சரிப்புடன் தெளிவாக வாசிக்க வேண்டும்.

2. கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பில் சுமார் நான்கு நிமிடங்களுக்குப் பேச வேண்டும்.

எடுத்துக்காட்டு

1. பின்வரும் பகுதியைப் பொருள் விளங்கும்படி தெளிவாக வாசித்துக் காட்டுக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை; மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல்; அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதிலேயே ஆகும். குழந்தையின் மன வளர்ச்சியோடு ஒத்து வளர்ந்து வருவது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது; மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சிபெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய் ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. பலர் ஓர் இனமாய் வாழ்கின்றனர் என்பதற்கு உண்மையான அறிகுறி அவர்களின் நிறம் முதலிய எவையும் அல்ல; அவர்கள் பேசும் மொழியே உண்மையான அறிகுறி எனலாம். சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தில் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி எனலாம்.

மனிதனது மனத்தை விடுத்து ஆராய்ந்தால், மொழியைப் பற்றி அறியத்தக்கதாக ஒன்றும் இல்லை. மொழியை வளர்த்தது மனமே; மனத்தின் இயற்கையைக் காட்டவல்லதாக, மனத்தின் எதிரொளியாக உள்ளது மொழியே. மனிதரின் தொடர்பு இல்லாமல் தனியே வளர்ந்து வாழ வல்லது என மொழியைப்பற்றிக் கருதுதல் பொருந்தாது. பேசும் மக்களை விட்டுத் தனியே மொழி என்பது இல்லை. மனிதர் ஒவ்வொருவரின் அறிவின் ஆழத்திலும் மொழி வேர் கொண்டுள்ளது; அங்கிருந்தே மொழி வளர்ச்சி பெற்று விளங்குகிறது.

பொருள்களை மட்டும் அறியும் அறிவு ஊமைக்கு உள்ளது; மொழிவளர்ச்சி இல்லாமையால் மேலும் அறிவை வளர்க்க வாய்ப்பு இல்லை. நாகரிகம் தொடங்கு முன்பு, மக்களுக்குப் புலன்கள் வளர்ந்திருந்தன; இயற்கையும் வளம் மிக்குக் காத்து வந்தது; ஆயின் அக்காலத்து மக்கள் அறிவு வளர்ச்சி பெறவில்லை. பேசக் கற்றுச் சொற்களைப் படைத்துக் கொண்ட பிறகே அறிவு வளரத் தொடங்கியது. பேச்சுடன் நிற்காமல் எழுத்துமுறை கற்று, சொற்களை மிகப் பயன்படுத்தத் தொடங்கிய பிறகே, அறிவு விரைவாக வளரலாயிற்று.

2. *பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி விரிவாகப் பேசுக.*

அ. சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கை முறை

ஆ. ஒருவர் நல்லவராக வாழ்வது சிறந்ததா? அல்லது வல்லவராக வாழ்வது சிறந்ததா? கருத்துரைக்க.